Presum

G.R.S. IX-5]

Previous references. —
677-15
3[illegible]-13

1927. (Pudukkottai)

File No. 161-22

Serial Nos. 142

Later references.
Inf. 259-23 & 1659.
319-F 9

GENERAL AND REVENUE SECRETARIAT.

Serial Nos. 2

Part B for [illegible]

SUBJECT

Praying ~~to the~~ help to stop the cruelty to animals.

To.

A. S. Arunachalam Esqr.

Karaikudi

No. Re 59 & 10-10-22

Acknowledge the receipt of his letter

Printed on the Multigraph.

[illegible]
1/11/22

15553

No. 380 / 1

OFFICE OF THE PRIVATE SECRETARY Mus 16:-22-1

TO HIS HIGHNESS THE MAHARAJA OF MYSORE,

Mysore, dated 23rd Aug. 1922

GENERAL 28 AUG 1922

Petition, as shown below, to His Highness the Maharaja is transferred to the Secretary to the Government of His Highness the Maharaja of Mysore, General Department, Bangalore, for disposal

K. V. L.
There was sometime ago
a similar appln in the matter of
prevention of cruelty to animals.
Please submit. Mr. K.S.C. whole Member
has expressed some views thereon.

No. 139 of 22-23

By Order,

Private Secretary
to His Highness the Maharaja of Mysore.

Mysore file nos 389 of 13
and 677 - is bearing on the
same subject. are not of
Kind perusal.
Para 3 of the present memorial
is decidedly the gravamen of the petn
who suggests the starting of a
Society under the Mysore patronage

GBPM—1,000-30-4-18

It is requested
that a medallion to 785
be taken up by
Phulan Kumari instead of Sheikh
the req[d] person by
slow degrees.

Kept reply the memorialist
in terms of one given in a
similar case in March 1916
vide mb[d]. (Vide 3 89 – 13)

7.7.22

Asst Secretary) 7/9/22

2894-310.
26.9.22.

Merely acknowledge
receipt of communication
& enclosures with thanks
& say we are about it.
Conditions in 1922 are different
to what they were in 1913!

25.9.22

Kept ready[d]

28/9/22

Issued
26.9.22

Cor. 2[o] to A.S. Arunachalam Esq
Karaikudi
No: 1417 & 10[th] Feb. 22
Acknowledges receipt
of his letter



மனிதர்வாய்ப்படும் அகில உலக உயிர்ப்பிராணிகள் மகாநாடு.

மனிதர் வாய்ப்பயிம் அகில உலக உயிர்ப்பிராணிகள் மகாநாடு

எனது அரிய சகோதரர்களே! இந்தப் பெரிய கூட்டத்திற்கு ஸ்ரீலஸ்ரீ ரிஷப தேவர் முதலிய பெரிய பெரிய தலைவர்கள் விஜயஞ் செய்திருப்பதற்கு நான் மிக்க சந்தோஷமடைகின்றேன். நீங்கள் எல்லாரும் இங்கு கிறைந்திருப்பதானது இந்தக் கூட்டம் எவ்வளவு அவசியமான தென்பதையும் உங்கட்கு இதிலிருக்கும் ஊக்கத்தையும் இனிது விளக்குகிறது. நிற்க, இந்த உலகம் உண்டான காலம் முதலாக நாளதுவரைக்கும் நாம் கௌரவமாகவும் பெருந்தன்மையோடும் பலர் மதிக்க வாழ்ந்து வருகிறோம். நம்மவரிற் பலரும், சிவபெருமானுக்கும் பெருமாளுக்கும் விநாயகர் கந்தக்கடவுள் பிர்மா தர்மராஜன் முதலிய பெரிய தெய்வங்கட்கும் வாகனங்களாகவும் கொடிகளாகவுமிருந்து பெருமை யடைந்து வருகிறோம். உலகத்திலுள்ள ஜனங்கட்கும் பேருபகாரஞ் செய்து வருகிறோம். இன்னும் பன்னிரண்டு ராசிகளிலிருந்து உலகத்திலிருக்கிற ஜனங்கட்கு ஜோதிட சாஸ்திர மூலமாக எவ்வளவோ சொல்லமுடியாத நன்மை செய்து வருகிறோம். இந்த நாட்டு ஜனங்கள் இரவுபகலாகத் தோத்திரம் புரிகிற கடவுளர்கள், நம்மிடங் கொண்டுள்ள கருணையினல் அவர்களுக்கும் உயரத்தில், நமக்கு இருப்பிடந்தந்து அவர்களது வரவை நம்மைப் பார்த்தறியும்படியான பெருமையையும் நமகளித்திருக்கிறார்கள். உண்மை யிப்படியிருக்க இவைகளே யெண்ணமல் நமது கூட்டத்தாருக்கு மனிதர்கள் துன்பத்தை யுண்டுபண்ணுவதால் இந்தப் பெரிய கான்பரன்ஸ் மூலமாகப் பல தீர்மானங்களைச் செய்து ராஜாதிராஜராக விளங்கும் கடவுளுக்கும் உலகத்திலுள்ள மற்ற உத்தியோகஸ்தர்களுக்கும் அனுப்ப வேண்டும். நமது கான்பரன்ஸ் இனிதுமுடியக் கடவுள் கிருபை செய்வாராக என்று பேசி விட்டுத் தமது ஆசனத்திலமர்ந்தார்.

திருவள்ளுவநாயனர் திருமூல தேவர் ஸ்ரீராமலிங்க சுவாமிகள் தாயுமானர் புத்தர்பிரான் காந்தியடிகள் சிபிச்சக்கிரவர்த்தி மநுநீதி கண்ட சோழமன்னன் கொடிபடாத்தேர்த் பாரிவள்ளல் முதலிய பல ஜீவகாருண்ய சீலர்கள் "நாங்கள் வர முடியவில்லை; கான்பரன்ஸ் இனிது நடைபெறட்டும்" என்று அனுப்பியிருந்த தந்திகள் படிக்கப்பெற்றன.

அதன் பிறகு சுப்பிரமணியக் கடவுளது கொடியாகவிருந்து வெற்றியையே கொடுத்து வருகிற ஸ்ரீலஸ்ரீ கோழியப்ப நாயனரெழுந்து,

"நாங்கள் செய்யும் உதவியை யேற்றுக்கொண்டும், வாயில்லாத ஏழைகளாகிய எங்களிடத்தில் இரக்கங்காட்டியும், நாங்கள் கடவுளுக்கு வாகனங்களாகவும் கொடிகளாகவுமிருந்து வருவதை யுத்தேசித்தும், எங்கள் உயிருக்கு எப்படியும் துன்பம் வராமல் காப்பாற்றும்படி மனிதர்களாகிய உங்களே வணக்கமாக வேண்டிக் கொள்கிறோம்" என்ற தீர்மானத்தைப் பிரரேபணை செய்து கம்பீரமான குரலில் பின்வருமாறு பேசினர்:—அன்பர்களே! இந்த உலகமும் இந்த உலகத்திலே வாழ்ந்து வருகிற மனிதர்களும் நாமும் மற்றையோரும் கடவுளருளாலேதான் பிறந்து வளர்ந்து வருகிறோம். ஆனல் நம் முன்னோர்கள் செய்த தவத்தால் நமது சகோதரர்களுள் ரிஷப தேவர் முதலியோரை சிவபெருமானும், கருடாழ்வார் முதலியோரை விஷ்ணு மூர்த்தியும் மூஷிகப் பிரபுவை மூத்தபிள்ளையாரும், எருமையண்ணலை தர்மராஜாவும் நமது அக்கிராசனர் வம்ஸதாரையும் எனது

குலத்தவரையும் கந்தக்கடவுளும் அபயங்கொடுத்துக் காத்துவருவதே முனிவர்களுக்கும் பக்தர்களுக்கும் கிடைக்காத பெரும்பதவியில் வைக்கள். நம்முடைய ஜாதி கேவலமானதல்ல. பரம்பரையாகவே பெருமைறது. உலகத்து ஜனங்கள் நமது பன்றி வமிசத்தாரைப் புத்தியில் அசிறந்தவர்களல்லரென்று சாதாரணமாக உண்மை யறியாமல் கருதுகிறார் மகாவிஷ்ணுவானவர், அப்படியல்ல அவர்களே சிறந்தவர்களென்று உலகத்தார்க்கு அறிவதற்காகப் பன்றி யுருவமெடுத்து வேதத்தைக் காப்பாற்றினர். பரமசிவன் பன்றிக்குட்டிகளுக்குத் தாமே அவ்வுருவங்கொண்டு பால் கொடுத்துக் காப்பாற்றினர். நமது குலத்தில் நாரைச்சிவமும் கரிக்குருவிப் பெருமானும் மோக்ஷத்தின் பம் பெற்றார்கள். கஜேந்திர ஆழ்வார் முதலியோரும் அப்படியே! இப்படிப்பட்ட சரித்திரங்கள் சொல்ல வேண்டுமாஞல் கோடானு கோடியுண்டு! எந்தப் புண்ணியஸ்தலங்களிலும் எந்த பக்திமார்க்கத்திலும் மோக்ஷ வழிகளிலும் நாம் பெருமை பெற்றுக் கடவுளுக்கு வேண்டியவர்களாகவே யிருக்கிறோம். நாமில்லாவிட்டால் சோதிட சாஸ்திரம் லக்ஷமின்றி இறந்து பட்டுப்போகும். மேலும் நாம் கெட்டவர்களல்ல. நாம் வேறொருவருடைய சொத்துக்கு ஆசைப்படுவது கிடையாது. நமக்கு ஐயறிவுதான் உண்டு என்று தெரியாதவர்கள் சொன்னலும் நாம் புலாலுண்பது கிடையாது. கள்ளுண்பதில்லை. பொய் பேசுவதில்லை. சூதாடுவதில்லை. யாராவது பக்திமான்கள் தூண்டப்பட்டவர்கள் நமது தேவர்களைக் கூப்பிட்டால் வயிற்று வலியாலுலும் காய்ச்சலாலுலும் உடம்புக்கு முடியவில்லையென்று சொல்வதில்லை. பக்தர்கட்கு அருள் சுரக்க வேண்டுமென்று எப்போது சிவபெருமான் விரும்புகிறாரோ அப்போதே நமது ரிஷபதேவர் தயாரென்கிறார். மனிதர்கள் நமது வாகனங்களிலேற வேண்டுமென்றலெப்படி யிருக்கிறது? குதிரை யிடக்குப்பண்ணினலல் பயணம் நின்றுபோய்விடாதா? நாம் அப்படிச் செய்வதில்லை. நம்முடைய சரித்திரத்தைப் பார்க்கட்டும்! யாருக்காவது கஷ்டத்தை யுண்டாக்கியிருக்கிறோமா? இல்லவேயில்லை. மேலும் இந்த உலகத்து மனிதர்களுக்கு நம்மைக காப்பாற்றுவதற்காகப் பல வழிகளில் உதவி புரிகிறோம். பாலும் மோரும் நெய்யும் அவர்களுணவிற்குக் கொடுக்கிறோம். போர்வைகட்குக் கம்பளியுரோமம் கொடுக்கிறோம். வயலுக்கு உரம்போடுவதற்கு எரு சப்ளை செய்கிறோம். புத்தகங்கட்கு அட்டைபோட நமது தோல்களையும் கொடுக்கிறோம். இப்போது சினி செய்வதற்கு தந்தி முனிவரைப்போலவே நமது எலும்புகளையும் கொடுத்து வருகிறோம். அவர்களுக்கு வாகனமாகவுமிருந்து வருகிறோம். அவர்கள் உண்மையாக பக்தி செலுத்தினலல் அவாகளுடைய கடவுளரை நாம் தூக்கிக்கொண்டு வந்து அவர்களுகு முன்னே விடுகிறோம. அவர்கள் கண்களிரக்கண்டு களிக்கிறவரை நாமும பொறுத்துக கொண்டிருக்கிறோம். அவாகள் தாயில்லாப்பிள்ளையாயிருந்தால் நமது பாலைக்கொடுத்து வளர்க்கிறோம். இப்படி மனிதருக்குப் பிறந்தது முதல் மோக்ஷத்திற்குப் போகிறவரை உதவிபுரிந்து வருகிற நம்மை அவர்களும் பிள்ளைபோல் வளர்த்துக, காப்பாற்றுமல் வெட்டிக்கொல்வதென்றல் பொறுக்க முடியாத வருத்தமாயிராதா? நான் சுப்பிரமணியக் கடவுளை விட்டுப்பிரிந்ததே கிடையாது. அங்கே பல பகுதிகளைப்பற்றி உளவாளிகள் பலர் வந்து சுவாமி

யிடத்தில் பின்வருமாறு சொன்னார்கள். "மகாபக்தர்கள்; இரவுபகலாகக் கோவிலே குடியாக இருக்கிறார்கள்; தொண்டு புரிகிறார்கள்; பெரும்படிப்பாளிகள்; பிரசங்கஞ் செய்கிறார்கள்; வருஷ மொருமுறை கங்கையில் தீர்த்தமாடுகிறார்கள்; கோடி கோடியான பொருளே வாரிவாரித் தருமஞ் செய்கிறார்கள். நாளையோடு அவர்களுக்குப் பூமிவாழ்க்கை முடிகிறது" என்றார்கள். அப்படியே மறுநாள் அவர்கள் புறப்பட்டு எங்கள் ஷண்முகபுரத்திற்கு வந்தார்கள். நமது நாயகர் சுப்பிரமணியக் கடவுள் "அப்பா! இவர்கள் பக்தர்கள் தான் சந்தேகமில்லை; ஆனால் என்னுடைய அடியார்களாகிய ஆடப்பர் கோழியப்பரின் வமிசத்தை முட்டை வரை கருவறுத்திருக்கிறார்கள். ஆதலால் எனக்குமட்டும் செய்த பக்தியைப் பொருட்படுத்த முடியாது; நான் அடியார்க்கடியனுதலால் எனது அடியார்களுடைய மனதைப் புண்படுத்துபவர்களே நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன்; ஆனால் அவர்கள் உண்மையான பக்தி செய்திருப்பதால் அவர்களே யமலோகமாகிய நரக லோகத்துக்கனுப்பாமல் திரும்பவும் மறுபிறப்புக் கொடுத்துப் பூலோகத்துக் கனுப்பிவிடுங்கள்" என்று திருவாய்மலர்ந்து அனுப்பிவிட்டார்கள். நமக்கு அங்கே செல்வாக்கில்லாமற் போகவில்லே. அதை இங்குள்ள நமது மனித சகோதரர்களில் சிலர்மட்டும் தெரிந்து கொள்ளவில்லே. நம்முடைய நன்மையையும் அவர்களுடைய நன்மையையும் கருதியே இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். முழுமனதோடு ஆதரிக்க வேண்டுகிறேன் என்று பேசினர். தீர்மானம் ஏகமனத்தோடு அங்கீகரிக்கப்பெற்றது

"மற்றவர்களேப்போலவே உங்கள்! திருவருளால் பிறந்திருக்கிற எங்களே மனிதர்கள் பல வகையாக அவமானப்படுத்தாமலும் ரகசியமாகவும் பஹிரங்கமாகவும் கொலே புரியாமலுமிருக்கும்படி திருவுளம்பற்ற வேண்டுமென்று இந்தக்கூட்டம் மன்றாடுகிறது" என்ற தீர்மானத்தைப் பரமசிவனது திருக்கரத்திருந்து திவ்ய வாழ்க்கை வாழும் செல்வச் சிறுமான்கன்று துள்ளிக்குதித்து வந்து மேடையிலே றிப் பிரசேபணே செய்து பின்வருமாறு பேசிற்று :—

எனது தோழர்களே! உலகத்தில் எல்லா ஜீவராசிகளும் கடவுளது திருவருளாலேயே பிறந்திருக்கின்றன. கடவுளுக்குப் பல வகையிலும் நாம் வேண்டியவர்களாக விருக்கிறோம். பரம்பரைச் சைவ சந்ததியிலே பிறந்திருக்கிற நாம் கெட்ட காரியம் ஒன்றும் செய்வதில்லே. எல்லாருக்கும் உபகாரமே செய்து வருகிறோம். அப்படியிருக்க நம்மை மனிதர்கள் துடிக்கத்துடிக்கக் கத்திகொண்டு கழுத்தை யறுக்கிறார்கள்! திருவிழா வந்தாலும் பிள்ளே பிறந்தாலும் பிள்ளே பிறக்காவிட்டாலும் பொங்கல் வந்தாலும் புதுமை வந்தாலும் இழவு வந்தாலும் கலியாணம் வந்தாலும் படைப்பு வந்தாலும் பத்தி விழுந்தாலும் நமது கழுத்துக்குக் கத்தி வருகிறது. நம்மவரெல்லாரிலும் சாதுக்களா யிருப்பவர்கள் ஆடு கோழி வமிசத்தாரேயாவர். அவர்களேத்தான் கண்டபடி மனிதர்கள் கழுத்தறுப்பு செய்கிறார்கள். கலிகால வரதராயும் தெய்வங்களுள் சிறந்தவராகவும் அக்கிரமம் செய்பவரை அதம் செய்பவராயும் ஏழைகளேத் தோழமை கொண்டவராயுமுள்ள சுப்பிரமணியக் கடவுளே அவர்களேக் காப்பதாக அடைக்கலங் கொண்டிருக்கிறார். அப்படியிருந்தும் சிவபக்தர்கள் விஷ்ணு பக்தர்கள் ஸ்கந்தபக்தர்கள் விநாயக பக்

தர்களென்று சொல்லித் திருபுண்டாதாரண்ம் 'செய்து துவாதச ந
கொண்டு ஆடு கோழி பாரணை செய்யும் மனிதர்களையும் நாம் பார்க்கிறோம்.
சாகுஷ அஷ்டாக்ஷர ஜபஞ்செய்யும் பக்தர்கள் பலர் புலால்கொண்டு 'தொந்திண்டி
நிரப்புகிறார்கள். சாப்பிடுவதொருபுறங் கிடக்கட்டும். கண்டபடி கழுத்தறுப்பதை
இப்போதே தடுக்க வேண்டுமென்பதுதான் இந்தத் தீர்மானத்தின் கருத்தாகும்.
பெரிய பெரிய கடவுளர்களால் மதிக்கப்பெற்றிருக்கிறோம். அப்படியிருக்க நமது
சந்ததியாரைச் சில ஜனங்கள் கேள்வி முறையின்றித் தாயலறப்பிள்ளையையும்
கொல்லுகிறார்கள். கொலைக்குற்றம் செய்தவரைக்கூட இப்படி ஏககாலத்தில்
முச்சந்திகளில் மடக்கிக்கொண்டு ரத்தம் சொரிய அறுப்பது எந்த உலகத்திலும்
கிடையாது. அப்படி யென்ன குற்றத்தை நம்மவர்கள் மனிதர்களுக்குச் செய்
திருக்கிறார்கள். இதைப்பார்த்துக் கொண்டு நாம் சிலர் மட்டும் பெரிய உத்தியோ
கங்களிலிருந்து பயனென்ன? இதற்கு விமோசனமில்லாவிட்டால் நாமிருந்தா
லென்ன செத்தாலென்ன? தன் ஜாதியார் அவமானமடையத் தான் நன்கு வாழ்
பவன் ஒரு பிறப்பிற் சேர்ந்தவனேயல்லன். திக்கற்றவருக்குத் தெய்வமே துணை
யென்றபடி வாயில்லாப் பிராணிகளுக்குக் கடவுள்தான் துணையாதலால் இந்தத்
தீர்மானத்தை அங்கீகரித்து நமது தேவர்கட்கு அனுப்ப வேண்டுகிறேன் என்று
சபையார் கண்களில் கண்ணீர் சொட்டும்படி உருக்கமாகப் பேசினர். ஏக ஆர
வாரத்தோடு தீர்மானம் அங்கீகரிக்கப்பெற்றது.

அக்கிரமம் செய்வாரைத் தண்டித்து நல்வழிப்படுத்துகிற யமதர்மராஜனது
வாகனமாயிருக்கிற மகிஷப்பெருமானெழுந்து, "உண்மையில் காளிகறுப்பனுகிய
நீங்கள் விரும்பாதிருக்கும்போது உங்கள் பெயரைச் சொல்லி எங்கள் கழுத்தை
யறுப்பவர்களை நல்வழிப்படுத்த நீங்கள் முன் வந்து முயற்சி செய்யவேண்டு
மென்று வணக்கமாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்" என்ற தீர்மானத்தைப் பிரே
ரணை செய்து பின் வருமாறு பேசியது :—

எனது அன்பின் மிக்க சகோதரர்களே!

காளியம்மனையும் கறுப்பண்ணசாமியையும் திருப்திப்படுத்தவேண்டுமென்று
கருதிய சில மனிதர்கள் நம்மவரின் கழுத்தை யறுத்து வருகிறார்கள். உண்மை
யில் காளியம்மன் பராசக்தியின் அம்சமாதலாலும் கருப்பண்ணசுவாமி மகாவிஷ்ணு
வின் அம்சமாதலாலும் இருவரும் ஆடு கோழிகளைக்கொன்று ஒருநாளும் மகிழ்வார்
களென்று கருத இடமேயில்லை. ஆனால் இவர்கள் குளிக்கப் போய்ச் சேறு பூசிக்
கொள்வதைப் போலத்தான் கடாய்ப்பலி கொடுத்துப் பாபத்தைக் கட்டிக்
கொள்வதோடு தேவர்களின் கோபத்திற்கும் ஆளாகிறார்கள். ஆனபடியினாலே
இந்தத தீர்மானத்தைக காளி கறுப்பண்ணன் முனியய்யா முதலியோருக்கு
அனுப்பி, அவர்களே வழிபடும் மனிதர்கள் இனிமேல் எந்தவிதமாகவும் யாருடைய
பெயரைச் சொல்லியும் நம்மினத்தவரைக் கண்டிப்பாக வெட்டக்கூடாதென்று
உலகத்திலுள்ள மனிதர்கட்கு உத்தரவிடுமாறு வேண்டிக்கொள்ளவேண்டும் என்று
பேசியது. இதனைப்பலரும் ஆமோதிக்கவே தீர்மானம் ஏகமனதாக ஒப்புக்
கொள்ளப்பட்டது.

உலகம் உய்வதற்குக் காரணமான பக்தர்களில் நிலவரான ஸ்ரீமத் காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் தமது 83-வது வயதில் கடந்த ஜூலை மாதம் 8-ந் தேதி காலை 8 மணிக்கு சிவபதம் அடைந்தார்கள். அவர்கள் மறைவு தமிழ் நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கே பேரிழப்பாகும். அவர்கள் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் பொருட்டு 10-ந் தேதி காலை 10 மணிக்கு சென்னை விவேகானந்தர் இல்லத்தில் ஒரு இரங்கல் கூட்டம் நடைபெற்றது. அதில் ஸ்ரீ ராஜாஜி அவர்கள் தலைமை வகித்தார்கள். ஸ்ரீ ராஜாஜி அவர்கள் தலைமை வகித்து ஆற்றிய உரை வருமாறு:—

"ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் பொருட்டு இன்று இங்கு கூடியிருக்கிறோம். அவர்கள் மறைவு தமிழ் நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கே பேரிழப்பாகும். அவர்கள் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் பொருட்டு 10-ந் தேதி காலை 10 மணிக்கு சென்னை விவேகானந்தர் இல்லத்தில் ஒரு இரங்கல் கூட்டம் நடைபெற்றது. அதில் ஸ்ரீ ராஜாஜி அவர்கள் தலைமை வகித்து ஆற்றிய உரை வருமாறு:—

அன்பர்களே! சில வருஷங்களுக்கு முன்னால் மனிதர் பலபேர் உண்மை யறியாமல் பகுமதிகளாக் கண்டபடி கொலை புரிந்து வந்தார்கள். பகவானுலே உலகம் அழியாலிருக்கிறது. பகவின் உடம்பில்தான் தேவர்களும் முனிவர் களும் எல்லாருமான சகல அண்டங்களும் சந்திர சூரியர்களும் விளங்கிறார்கள். இதனைப்பலரும் அறியாமல் பசுக்களைத் துன்புறுத்தியும் அலட்சியப்படுத்தியும் வந் தார்கள். ஆனால் பெரிய பெரிய புராணிகர்களும் பெரிய மேதாவிகளும் வாக்கால முடையவர்களும் வெளிவந்து உண்மையை வெளிப்படுத்தி ஜனங்களுக்கு விளக்கிக் கூறி வந்ததன் பயனாக இப்போது பசுக்கொலை அதிகமாக நின்றிருக்கிறது. அப்படியே இப்போது புராணிகர்களும், மடாதிபதிகளும், மத சம்பந்தமான சபைக் களும், பிரசங்கிகளும், வித்வான்களும், இன்னும் பிரமுகர்களான பெரியார்களும் பிர சாரம் செய்ய முன் வருவார்களானால் மிக சில வருஷங்களில் இவ்விதமாகப் பசுவதை ஒழிந்து போவதில் சந்தேகமில்லை. ஆதலால் இந்தத் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன் என்று சொன்னார். மற்றும் சிலரால் ஆமோதிக்கப்பெற்று அங்கீகரிக்கப்பெற்றது.

பின்னர் அகில இலங்கைத் தமிழ் மகாஜன காங்கிரஸ் தலைவர் எழுந்து, "கண்ணியமான சகோதரர்களே! இன்று நாம் செய்திருக்கிற நான்கு தீர்மானங்களும் மிகச்சிறந்த வையாகும். சில சண்பர்களுக்கு இன்னொரு தீர்மானத்தை இவைகளோடு சேர்த்துச் செய்யலாமென்ற விருப்பமிருந்தது. அதாவது புலாலுண்பவர்களுக்கும் அது பாபமில்லை யென்பதைத் தெரிவிக்கவேண்டுமென்பதாகும். சில அன்பர் கள் இப்போது முதலில் கொலை செய்வதை நிறுத்தும்படி கேட்டுக்கொள்வோம்; பற்றவைகளை அடுத்த கூட்டங்களில் தீர்மானிக்கலாமென்று அபிப்பிராயப் பட்டார்கள். இது முதலாவது கூட்டமாக விருப்பதால் அவ்விஷயங்களைப்பற்றி மற்ற கூட்டங்களில் பேசி முடிவு செய்வோம். இந்தத் தீர்மானங்களால் சில கஷ்ட நிவாரணங்களை ஏற்படும். முயல், மீன், கத்தாலி, மான், புறா, கோழி, ஆடு, குருவிகள் முதலியவர்களுக்குத் துன்பமிருந்து வருவது போலவே ஆடு கோழிகளுக்கும் இன்னும் துன்பமிருந்து வருகிறது. ஆனால் ஆடு கோழிகளும் எருமை, பன்றி, பசு முதலிய மற்றும் சிலருக்கும் அதிகமான துன்பம் கொல் பவர்களுண்டாகியிருக்கிறபடியால் முதலில் கொலையை நிறுத்தவேண்டுமென்ற தீர்மானமே முக்கியமாகக் கருதப்பட்டதென்பதை நான் சொல்ல வேண்டிய தில்லை. நாம் ஒற்றுமையாக இருந்து மற்ற சண்பகங்களையும் அடைய முயல வேண்டும். மனிதர்களுக்கு ஒரு துன்பமும் சம்பவிக்காதபடியும் மேலும் மேலும் சம்மால் அவர்களுக்கு சுகமுண்டாகுமாறும் நாம் நடந்துகொள்ள

வேண்டும். எல்லாவற்றுக்கும் கடவுள் திருவருள் முன்னிறகட்டும் தமது முடிப்புரையைப் பேசி முடித்தனர்.

கான்பரன்ஸின் காரியதரிசியாக மான்கன்றை நியமித்தார்கள். முதலாவது தீர்மானம் வாயு பகவானுக்கனுப்பப்பட்டு உலகத்திலுள்ள மனிதர்கள் யாவருக்கும் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது. இரண்டாவது தீர்மானம் பரமசிவன் மகாவிஷ்ணு விநாயகர் முருகக்கடவுள் பிர்மா தேவேந்திரன் முதலிய தேவர்கட்கு அனுப்பப்பெற்றது. மூன்றாவது தீர்மானம் ஐயனாருக்கும் மாகாளராகிய கறுப்பண்ணசாமிக்கும் காளியம்மனுக்கும் அனுப்பப்பட்டு, மற்ற எல்லாக் கறுப்பண்ணர்களுக்கும் பேச்சிராக்காயி முதலிய பெண் தெய்வங்கட்கும் மற்றைய ஐயனாருக்குள் அடங்கிய சகல தேவதைகட்கும் சுற்றுக்கடிதம் அனுப்பும் படி கேட்டுக்கொள்ளப்பட்டது. நான்காவது தீர்மானம் உலகத்திலுள்ள பிரபல புராணிகர்களுக்கும் அனுப்பப்பட்டதுடன் ஸ்ரீசங்கர - ராமானுஜ - மத்வமடங்களுக்கும், தருமபுரம் திருவாவடுதுறை திருப்பனந்தாள் - - - - திருக்கோவலூர் சிதம்பரம் கோவிலூர் முதலிய மடாலயங்கட்கும், ராமகிருஷ்ண மடங்கள், ஸ்ரீ விவேகானந்தாச்ரமங்கள், மதாபிமான சங்கங்கள், ஜீவகாருண்ய சங்கங்கள், கிறிஸ்தவ சங்கங்கள், மகமதிய உலமாக்கள், தியாசபிகல் சங்கங்கள், ஆரிய சமாஜம் பிர்மசமாஜங்கள் முதலிய பல மதஸ்தாபன ஸ்தலங்கட்கும் பத்திராதிபர்கட்கும் நிருப நேயர்கட்கும் இன்னும் பல வகைப்பட்ட மதப்பிரசாரகர்கட்கும் அனுப்பப் பட்டன. பிறகு காரியதரிசி யெழுந்து தங்கள் உத்தியோகத்தினின்றும் ஓய்வு எடுத்துக்கொண்டு பல பல உலகங்களிலிருந்து இங்கு விஜயஞ் செய்திருந்த பெரியார்கட்கும் ஏனையோருக்கும் வந்தனம் கூறினர். கடவுள் வாழ்த்துக் கூறப்பட்டு சபை மங்களகரமாக இரவு ஒன்பது மணிக்கு நிறைவெய்தியது.

பர்மா நாட்டுக்கோட்டையார் சங்கத்தின் பொருளுதவி பெற்றது.

சாது அச்சுக்கூடம், சென்னை.



மனிதர்வாய்ப்படும் அகில உலக உயிர்ப்பிராணிகள் மகாநாடு.

தர் வாய்ப்படும் அகில உலக உயிர்ப்பிராணிகள் மகாநாடு

யிலாடி பாதையில் சத்ய வருஷம் தைமாதம் பன்னிரண்டாந் தேதி பகல் மூன்று மணிக்கு மகாநாடி (காப்பரன்ஸ்) கூடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப் பெற்றன. அழகான அலங்காரக் கொட்டகை போடப்பட்டிருந்தது. அதிற் பல பக்கங்களிலும் கொடிகள் கட்டப்பட்டும் தோரணங்கள் காட்டப்பட்டும் பார்ப்பவர் கண்ணைக் கவர்ந்து கொண்டிருந்தன. சுற்றும் பிரதிநிதிகளுட்கார நடுவிலே மேலில் அக்கிராசனருக்கும் உபாத்தியாயம் புரிவதற்கும் ஒரு பெரிய மேடை போடப்பட்டிருந்தது. வெளிவாசலில் "பிறருக்குத் தன்ப மிழைப் பதே பெருந்பாவம். பிரோபகாரமே பிரப்பின் பயன்" என்ற எழுதப்பட்டிருந்தது. குறித்த நேரத்தற்று காலையிலிருந்தே பிரதிநிதிகள் வந்தவண்டிருந்தார்கள். பல நூறு மணி தூரத்தில் பல உலகங்களிலிருந்தும் வரிசை வரிசையாக வாகனங்கள் வந்து கொண்டிருந்தன. சரியாக மூன்று மணிக்கு அக்கிராசனரையும் பிரசங்கிகளையும் மரியாதையாக அழைத்து வந்தார்கள். அப்பொழுது பிரம்மாண்டமான அந்தக் கொட்டகையில் எவ்வளவும் இடமில்லாது பிரதிநிதிகளும் பிரேட்சகர்களும் கூடியிருந்தார்கள். பெருத்த காலகோலத்தினிடையில் அக்கிராசனரும் மற்ற பிரமுகர்களும் அங்கு வரவேற்கப் பெற்றார்கள். ஆடுகோழி பன்றி மூன்று மான் பசு பருவை எலி எலிப்பு புரு காகக்கட்டுக்குருவி களிதின்னும் வெளவால் முதலிய, மனிதர்களால் கொன்று தின்னப்படும் பிராணிகள் நிரண்டு கொட்டகை கதையச் சூழ்மியிருந்தார்கள்.

வெகுபெருமானுக்கு செல்லக்கமாக வாகனமாகவும் கொடியாகவுமிருந்து வினங் கெருந் சிவபத்தரும் வெகுபெருமானது திருக்காத்தில் பொலிந்து விளங்கும் திருமான் டலரும் பிரமரது வாகனமான மூஷிகப் பிரபுவும் கந்தக்கடவுளது வாகனமும் பிரமதாளை ஆடப்பிடிகளும் சோழியப்பாயனரும் யமதருமருடைய னரிய ஸ்ரீ முருகவண்ணரும் இந்திரனுடைய செல்வப்பேறான காமதேநு காவியாரு வேறு பல பிரமுகர்களும் அக்கூட்டத்திற்கு விஜயஞ் செய்திருந்தார்கள். கூட்டம் ஆரம்பிக்கப்பெற்றது. மண்முதலுடைய வாகனமான பஞ்சவர் னத்தின் வெழுந்த கேட்டார் செவியினிருகுமாற கடவுள் வாழ்த்துக் கூறியது. டனே அதற்கு சம்பிரதாய முன்னணியில் வீற்றிருந்த ஸ்ரீலஸ்ரீ ஈஸ்வரதேவர் எழுந்து உலகத்திலே ஜனங்களால் மிருதியுற துன்புறுத்தப்படுவதில் ஆடப்ப தேவரின் சொந்தரத்தாரே முதன்மை பெற்றிருப்பதாலும் சமீபத வாகரான ஸ்ரீசுப்பிரமணியக் கடவுளது ஊர்தியாக விருப்பதாலும் அவரையே அக்கிராசனத் தமர்த்த வேண்டுமென்ற பிரேரணை செய்தார். யாவரும் பெருத்த ஆரவாரஞ் செய்ய அப்படியே ஸ்ரீமான் ஆடப்பதேவர் அக்கிராசனத் தமர்ந்து தமது முகவுரைப் பிரசங்கத்தைப் பின்வருமாற செய்தார் :—

எனது அரிய சகோதரர்களே! இந்தப் பெரிய கூட்டத்திற்கு ஸ்ரீலஸ்ரீ ரிஷப தேவர் முதலிய பெரிய பெரிய தலைவர்கள் விஜயஞ் செய்திருப்பதற்கு நான் மிக்க சந்தோஷமடைகின்றேன். நீங்கள் எல்லாரும் இங்கு கிறைந்திருப்பதானது இந்தக் கூட்டம் எவ்வளவு அவசியமான தென்பதையும் உங்கட்கு இதிலிருக்கும் ஊக்கத்தையும் இனிது விளக்குகிறது. நிற்க, இந்த உலகம் உண்டான காலம் முதலாக நாளதுவரைக்கும் நாம் கௌரவமாகவும் பெருந்தன்மையோடும் பலர் மதிக்க வாழ்ந்து வருகிறோம். நம்மவரிற் பலரும், சிவபெருமானுக்கும் பெருமாளுக்கும் விநாயகர் கந்தக்கடவுள் பிர்மா தர்மராஜன் முதலிய பெரிய தெய்வங்கட்கும் வாகனங்களாகவும் கொடிகளாகவுமிருந்து பெருமை யடைந்து வருகிறோம். உலகத்திலுள்ள ஜனங்கட்கும் பேருபகாரஞ் செய்து வருகிறோம். இன்னும் பன்னிரண்டு ராசிகளிலிருந்து உலகத்திலிருக்கிற ஜனங்கட்கு ஜோதிட சாஸ்திர மூலமாக எவ்வளவோ சொல்லமுடியாத நன்மை செய்து வருகிறோம். இந்த நாட்டு ஜனங்கள் இரவுபகலாகத் தோத்திரம் புரிகிற கடவுளர்கள், நம்மிடங் கொண்டுள்ள கருணையினால் அவர்களுக்கும் உயரத்தில், நமக்கு இருப்பிடந்தந்து அவர்களது வரவை நம்மைப் பார்த்தறியும்படியான பெருமையையும் நமகளித்திருக்கிறார்கள். உண்மை யிப்படியிருக்க இவைகளே யெண்ணமல் நமது கூட்டத்தாருக்கு மனிதர்கள் துன்பத்தை யுண்டுபண்ணுவதால் இந்தப் பெரிய கான்பரன்ஸ் மூலமாகப் பல தீர்மானங்களைச் செய்து ராஜாதிராஜராக விளங்கும் கடவுளுக்கும் உலகத்திலுள்ள மற்ற உத்தியோகஸ்தர்களுக்கும் அனுப்ப வேண்டும். நமது கான்பரன்ஸ் இனிதுமுடியக் கடவுள் கிருபை செய்வாராக என்று பேசி விட்டுத் தமது ஆசனத்திலமர்ந்தார்.

திருவள்ளுவநாயனார் திருமூல தேவர் ஸ்ரீராமலிங்க சுவாமிகள் தாயுமானார் புத்தர்பிரான் காந்தியடிகள் சிபிச்சக்கிரவர்த்தி மநுநீதி கண்ட சோழமன்னன் கொடிபடாத்தேரீந்த பாரிவள்ளல் முதலிய பல ஜீவகாருண்ய சீலர்கள் "நாங்கள் வா முடியவில்லை; கான்பரன்ஸ் இனிது நடைபெறட்டும்" என்று அனுப்பியிருந்த தந்திகள் படிக்கப்பெற்றன.

அதன் பிறகு சுப்பிரமணியக் கடவுளது கொடியாகவிருந்து வெற்றியையே கொடுத்து வருகிற ஸ்ரீலஸ்ரீ கோழியப்ப நாயனரெழுந்து,

"நாங்கள் செய்யும் உதவியை யேற்றுக்கொண்டும், வாயில்லாத ஏழைகளாகிய எங்களிடத்தில் இரக்கங்காட்டியும், நாங்கள் கடவுளுக்கு வாகனங்களாகவும் கொடிகளாகவுமிருந்து வருவதை யுத்தேசித்தும், எங்கள் உயிருக்கு எப்படியும் துன்பம் வராமல் காப்பாற்றும்படி மனிதர்களாகிய உங்களே வணக்கமாக வேண்டிக் கொள்கிறோம்" என்ற தீர்மானத்தைப் பிரரேபணை செய்து கம்பீரமான குரலில் பின்வருமாறு பேசினார்:—அன்பர்களே! இந்த உலகமும் இந்த உலகத்திலே வாழ்ந்து வருகிற மனிதர்களும் நாமும் மற்றையோரும் கடவுளருளாலேதான் பிறந்து வளர்ந்து வருகிறோம். ஆனால் நம் முன்னோர்கள் செய்த தவத்தால் நமது சகோதரர்களுள் ரிஷப தேவர் முதலியோரை சிவபெருமானும், கருடாழ்வார் முதலியோரை விஷ்ணு மூர்த்தியும் மூஷிகப் பிரபுவை மூத்தபிள்ளையாரும், எருமையண்ணலை தர்மராஜாவும் நமது அக்கிராசனர் வம்ஸத்தாரையும் எனது

யும கள ளும அப ாடுதலுக் காத்துவருவதே
முனிவர்களுக்கும் பக்தர்களுக்கும் கிடைக்காத பெரும்பதவியில்
கள். நம்முடைய ஜாதி வேலமானதல்ல. பரம்பரையாகவே பெருமை
றது. உலகதது ஜனங்கள் நமது பன்றி வமிசத்தாரைப் புத்தியில்
றந்தவர்களல்லவென்று சாதாரணமாக உண்மை யறியாமல் கருதுகி
மாவிஷ்ணுவானவா, அப்படியல்ல அவர்களே றந்தவர்களென்று உலகத்
அறிவதற்காகப் பனறி யுருவமெடுதது வேதத்தைக் காப்பாற்றினர்.
பன்றிகுட்டிகளுகுத தாமே அவ்வுருவங்கொண்டு பால் கொடுத்துக் காப்பாற்
றினா நமது குலதநில் தாரைச்சிவமும் கிக்குருவிப் பெருமானும் மோக்ஷவின்
பம பெறறாகள. கஜேநதிர ஆழ்வா முதலியோரும் அப்படியே! இப்படிப்பட்ட
சரிதநிரகள் சொலல வேண்டுமாலல கோடானு கோடியுண்டு! எந்தப் புண்ணிய
ஸதலகளிலும எநத பகதிமாகதநிலும மோக்ஷ வழிகளிலும் நாம் பெருமை
பெறறுக கடவளுகு வேண்டியவாகளாகவே யிருக்கிறோம். நாமில்லாவிட்டால்
சோழிட சாஸதிரம லகயினறி இறநது பட்டுபோகும. மேலும் நாம் கெட்டவர்க
லல. நாம வேறொருவருடைய சொத்துகு ஆசைபடுவது கிடையாது.
நமகு ஐயறிவுதான உண்டு எனறு தெரியாதவாகள சொன்னலும நாம் புலாலுண்
பது கிடையாது களளுணபதிலலை. பொய பேசுவதிலலை. சூதாடுவதில்லை.
யாராவது பகதிமானகள தூண்பப்பட்டவாகள நமது தேவாகளுக கூப்பிட்டால்
வயிறறு வலியாலும காயசலாலும உடமபுகு முடியவில்லையென்று சொல்வ
திலலை பகதாகட்கு அருள சுரகக வேணடுமென்ற எப்போது சிவபெருமான்
விரும்புகிறாரோ அபபோதே நமது ரிஷபதேவா தயாரெனகிறா. மனிதாகள்
தமது வாகனகளிலேற வேணடுமெனருலெபபடி யிருகிறது? குதிரை யிடக
குபபணணினால பயணம நினறுபோயவிடாதா? நாம அபபடிச செய்வதில்லை.
நமுடைய சரிதநிரத்தைப பாககட்டும! யாருகாவது கஷ்டததை யுண்டாகி
யிருகிறோமா? இலலவேயிலலை மேலும இநத உலகத்து மனிதாகளுகு
மழைக காபபாறறுவதறாகப பல வழிகளில உதவி புரிகிறோம. பாலும
மொரும தயயும அவாகளுணவிறகுக கொடுகிறோம போாவைகடகுக கமபளி
யுரோமம கொடுகிறோம. வயலுகு உரமபோடுவதற்கு எரு சபளை செயகிறோம்.
புததகுகட்கு அடைபோட நமது தோலகளையும கொடுகிறோம. இப்போது
சினி செயவதறகு தந்தி முளிவரைபபோலவே நமது எலுமபுகளையும கொடுத்து
வருகிறோம அவாகளுகு வாகனமாகவுமிருநது வருகிறோம. அவாகள் உணமை
யாக பசதி செலுததினால அவாகளுடைய கடவுளரை நாம தூகிகொணடு வந்து
அவாகளுகு முனனே விடுகிறோம. அவாகள கணகுளிரகணடு களிகிறவரை
நாமும பொறுதது கொணடிருகிறோம. அவாகள தாயிலலாபபிள்ளையாயிருந்
தால நமது பாலகொடுத்து வளாகிறோம இபபடி மனிதருகுப் பிறந்தது
முதல மோக்ஷதிறகுப போகிறவரை உதவிபுரிநது வருகிற நமமை அவாகளும
பினனைபோல வளாதது, காபபாறறுமல வெட்டிகொலவதெனறால பொறுக
முடியாத வருத்தமாயிராதா? நான சுபபிரமணியக கடவுளை வட்டுப்பிரிந்தே
கிடையாது. அங்கே பல பகதரைபபறறி உளாளாகள பலா வநது சுவாமி

யிடத்தில் பின்வருமாறு சொன்னார்கள். "மகாபக்தர்கள்; இரவுபகலாகக் கோவிலே குடியாக இருக்கிறார்கள்; தொண்டு புரிகிறார்கள்; பெரும்படிப்பாளிகள்; பிரசங்கஞ் செய்கிறார்கள்; வருஷ மொருமுறை கங்கையில் தீர்த்தமாடுகிறார்கள்; கோடி கோடியான பொருளை வாரிவாரித் தருமஞ் செய்கிறார்கள். நாளையோடு அவர்களுக்குப் பூமிவாழ்க்கை முடிகிறது" என்றார்கள். அப்படியே மறுநாள் அவர்கள் புறப்பட்டு எங்கள் ஷண்முகபுரத்திற்கு வந்தார்கள். நமது நாயகர் சுப்பிரமணியக் கடவுள் "அப்பா! இவர்கள் பக்தர்கள் தான் சந்தேகமில்லை; ஆனால் என்னுடைய அடியார்களாகிய ஆடப்பர் கோழியப்பரின் வமிசத்தை முட்டை வரை கருவறுத்திருக்கிறார்கள். ஆதலால் எனக்குமட்டும் செய்த பக்தியைப் பொருட்படுத்த முடியாது; நான் அடியார்க்கடியனுதலால் எனது அடியார்களுடைய மனதைப் புண்படுத்துபவர்களே நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன்; ஆனால் அவர்கள் உண்மையான பக்தி செய்திருப்பதால் அவர்களே யமலோகமாகிய நரகலோகத்துக்கனுப்பாமல் திரும்பவும் மறுபிறப்புக் கொடுத்துப் பூலோகத்துக்கனுப்பிவிடுங்கள்" என்று திருவாய்மலர்ந்து அனுப்பிவிட்டார்கள். நமக்கு அங்கே செல்வாக்கில்லாமற் போகவில்லை. அதை இங்குள்ள நமது மனித சகோதரர்களில் சிலர்மட்டும் தெரிந்து கொள்ளவில்லை. நம்முடைய நன்மையையும் அவர்களுடைய நன்மையையும் கருதியே இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். முழுமனதோடு ஆதரிக்க வேண்டுகிறேன் என்று பேசினார். தீர்மானம் ஏகமனத்தோடு அங்கீகரிக்கப்பெற்றது

"மற்றவர்களைப்போலவே உங்கள்! திருவருளால் பிறந்திருக்கிற எங்களை மனிதர்கள் பல வகையாக அவமானப்படுத்தாமலும் ரகசியமாகவும் பஹிரங்கமாகவும் கொலை புரியாமலுமிருக்கும்படி திருவுளம்பற்ற வேண்டுமென்று இந்தக்கூட்டம் மன்றாடுகிறது" என்ற தீர்மானத்தைப் பரமசிவனது திருக்காதிருந்து இவ்வாழ்க்கை வாழும் செல்வச் சிறுமான்கன்று துள்ளிக்குதித்து வந்து மேடையிலேறிப் பிரசேபணை செய்து பின்வருமாறு பேசிற்று :—

எனது துணைவர்களே! உலகத்தில் எல்லா ஜீவராசிகளும் கடவுளது திருவருளாலேயே பிறந்திருக்கின்றன. கடவுளுக்குப் பல வகையிலும் நாம் வேண்டியவர்களாக விருக்கிறோம். பரம்பரைச் சைவ சந்ததியிலே பிறந்திருக்கிற நாம் கெட்ட காரியம் ஒன்றும் செய்வதில்லை. எல்லாருக்கும் உபகாரமே செய்து வருகிறோம். அப்படியிருக்க நம்மை மனிதர்கள் துடிக்கத்துடிக்கக் கத்திகொண்டு கழுத்தை யறுக்கிறார்கள்! திருவிழா வந்தாலும் பிள்ளை பிறந்தாலும் பிள்ளை பிறக்காவிட்டாலும் பொங்கல் வந்தாலும் புதுமை வந்தாலும் இழவு வந்தாலும் கலியாணம் வந்தாலும் படைப்பு வந்தாலும் பதறி விழுந்தாலும் நமது கழுத்துக்குக் கத்தி வருகிறது. நம்மவரெல்லாரிலும் சாதுக்களா யிருப்பவர்கள் ஆடு கோழி வமிசத்தாரேயாவர். அவர்களைத்தான் கண்டபடி மனிதர்கள் கழுத்தறுப்பு செய்கிறார்கள். கலிகால வரதராயும் தெய்வங்களுள் சிறந்தவராகவும் அக்கிரமம் செய்பவரை அதம் செய்பவராயும் எழைகளைத் தோழமை கொண்டவராயுமுள்ள சுப்பிரமணியக் கடவுளே அவர்களைக் காப்பதாக அடைக்கலங் கொண்டிருக்கிறார். அப்படியிருந்தும் சிவபக்தர்கள் விஷ்ணு பக்தர்கள் ஸ்கந்தபக்தர்கள் விநாயக பக்

ம. வறறுகுமம கடவுள ருள முன
தமது முடிப்புரையைப் பேசி முடித்தனர்.

கான்பரன்ஸின் காரியதரிசியாக மான்கன்றை நியமித்தீர்கள். மூ
தீர்மானம் வாயு பகவானுக்கனுப்பப்பட்டு உலகத்திலுள்ள மனிதர்கள்
தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது. இரண்டாவது
மானம் பரமசிவன் மகாவிஷ்ணு விநாயகர் முருகக்கடவுள் பிர்மா தேவேந்திரன்
முதலிய தேவர்கட்கு அனுப்பப்பெற்றது. மூன்முவது தீர்மானம் ஐயனுருக்கும்
மாகாளராகிய கறுப்பண்ணசாமிக்கும் காளியம்மனுக்கும் அனுப்பப்பட்டு, மற்ற
எல்லாக் கறுப்பண்ணர்களுக்கும் பேச்சிராக்காயி முதலிய பெண் தெய்வங்கட்கும்
மற்றைய ஐயனுருக்குள் அடங்கிய சகல தேவதைகட்கும் சுற்றுக்கடிதம் அனுப்பும்
படி கேட்டுக்கொள்ளப்பட்டது. நான்காவது தீர்மானம் உலகத்திலுள்ள பிரபல
புராணிகர்களுக்கும் அனுப்பப்பட்டதுடன் ஸ்ரீசங்கர - ராமானுஜ - மத்வமடங்க
ளுக்கும், தருமபுரம் திருவாவடுதுறை திருப்பனந்தாள் . திருக்
கோவலூர் சிதம்பரம் கோவிலூர் முதலிய மடாலயங்கட்கும், ராமகிருஷ்ண மடங்
கள், ஸ்ரீ விவேகானந்தாச்சரமங்கள், மதாபிமான சங்கங்கள், ஜீவகாருண்ய சங்கங்கள்,
கிறிஸ்தவ சங்கங்கள், மகமதிய உலமாக்கள், தியாசபிகல் சங்கங்கள், ஆரிய சமாஜம்
பிர்மசமாஜங்கள் முதலிய பல மதஸ்தாபன ஸ்தலங்கட்கும் பத்திராதிபர்கட்கும்
நிருப நேயர்கட்கும் இன்னும் பல வகைப்பட்ட மதப்பிரசாரகர்கட்கும் அனுப்பப்
பட்டன. பிறகு காரியதரிசி யெழுந்து தங்கள் உத்தியோகத்தினின்றும் ஓய்வு
எடுத்துக்கொண்டு பல பல உலகங்களிலிருந்து இங்கு விஜயஞ் செய்திருந்த பெரி
யார்கட்கும் ஏனையோருக்கும் வந்தனம் கூறினர். கடவுள் வாழ்த்துக் கூறப்பட்டு
சபை மங்களகரமாக இரவு ஒன்பது மணிக்கு நிறைவெய்தியது.

பர்மா நாட்டுக்கோட்டையார் சங்கத்தின் பொருளுதவி பெற்றது.

சாது அச்சுக்கூடம், சென்னை.



மனிதர்வாய்ப்படும் அகில உலக உயிர்ப்பிராணிகள் மகாநாடு.

பபம் அகில உலக உயிர்ப்பிராணிகள் மகாநாடு

மயிலாடு பாறையில் சக்ய வருஷம் தைமாதம் பன்னிரண்டாந் தேதி பகல் மூன்று மணிக்கு மகாநாடு (கான்பரன்ஸ்) நடப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப் பெற்றன. அழகான அலங்காரக் கொட்டகை போடப்பட்டிருந்தது. அதிற் பல பக்கங்களிலும் கொடிகள் கட்டப்பட்டும் தோரணங்கள் காட்டப்பட்டும் பார்ப்பவர் கண்ணைக் கவர்ந்து கொண்டிருந்தன. சுற்றும் பிரதிநிதிகளுட்கார இடம்விட்டு நடுவில் அக்கிராசனருக்கும் உபந்யாசம் புரிவதற்கும் ஒரு பெரிய மேடை போடப்பட்டிருந்தது. வெளிவாசலில் "பிறருக்குத் துன்ப மிழைப் பதே பெரும்பாவம். பரோபகாரமே பிறப்பின் பயன்" என்று எழுதப்பட்டிருந்தது. குறித்த தினத்தன்று காலையிலிருந்தே பிரதிநிதிகள் வந்துகொண்டிருந்தார்கள். பகல் ஒரு மணிமுதல் பல உலகங்களிலிருந்தும் வரிசை வரிசையாக விமானங்கள் வந்து கொண்டிருந்தன. சரியாக மூன்று மணிக்கு அக்கிராசனரையும் பிரபலஸ்தர்களையும் ஊர்வலமாக அழைத்து வந்தார்கள். அப்பொழுது பிரம்மாண்டமான அந்தக் கொட்டகையில் எவ்வளவும் இடமில்லாது பிரதிநிதிகளும் விஸிட்டர்களும் நிறைந்திருந்தார்கள். பெருத்த கரகோஷத்தினிடையில் அக்கிராசனரும் மற்ற பிரமுகர்களும் அங்கு வரவேற்கப் பெற்றார்கள். ஆடு கோழி பன்றி முயல் மான் பசு எருமை எலி உடும்பு புறு காசுக்கட்டுக்குருவி கனிதின்னும் வௌவால் முதலிய, மனிதர்களால் கொன்று தின்னப்படும் பிராணிகள் திரண்டு கொட்டகை நிறையக் குழுமியிருந்தார்கள்.

சிவபெருமானுக்கு நெடுங்காலமாக வாகனமாகவும் கொடியாகவுமிருந்து விளங்கிவரும் ரிஷபதேவரும் சிவபெருமானது திருக்கரத்தில் பொலிந்து விளங்கும் திருமான் உலவரும் விநாயகரது வாகனமான மூஷிகப் பிரபுவும் கந்தக்கடவுளது வாகனமும் கொடியுமான ஆடப்பதேவரும் கோழியப்பநாயனாரும் யமதருமருடைய ஊர்தியான ஸ்ரீ எருமையண்ணலாரும் இந்திரனுடைய செல்வப்பேரான காமதேநு நாச்சியாரும் வேறு பல பிரமுகர்களும் அக்கூட்டத்திற்கு விஜயஞ் செய்திருந்தார்கள். கூட்டம் ஆரம்பிக்கப்பெற்றது. மன்மதனுடைய வாகனமான பஞ்சவர்ணக்கிளி யெழுந்து கேட்டோர் செவியினிருக்குமாறு கடவுள் வாழ்த்துக் கூறியது. உடனே அங்கு கம்பீரமாக முன்னணியில் வீற்றிருந்த ஸ்ரீலஸ்ரீ ரிஷபதேவர் எழுந்து உலகத்திலே ஜனங்களால் மிகுதியும் துன்புறுத்தப்படுவதில் ஆடப்பதேவரின் கோத்திரத்தாரே முதன்மை பெற்றிருப்பதாலும் கலியுக வரதரான ஸ்ரீசுப்பிரமணியக் கடவுளாது ஊர்தியாக விருப்பதாலும் அவரையே அக்கிராசனத் தமர்த்த வேண்டுமென்று பிரேரணை செய்தார் யாவரும் பெருத்த ஆரவாரஞ் செய்ய அப்படியே ஸ்ரீமான் ஆடப்பதேவர் அக்கிராசனத் தமர்ந்து தமது முகவுரைப் பிரசங்கத்தைப் பின்வருமாறு செய்தார் :—

எனது அரிய சகோதரர்களே! இந்தப் பெரிய கூட்டத்திற்கு ஸ்ரீலஸ்ரீ ரிஷப தேவர் முதலிய பெரிய பெரிய தலைவர்கள் விஜயஞ் செய்திருப்பதற்கு நான் மிக்க சந்தோஷமடைகின்றேன். நீங்கள் எல்லாரும் இங்கு நிறைந்திருப்பதானது இந்தக் கூட்டம் எவ்வளவு அவசியமான தென்பதையும் உங்கட்கு இதிலிருக்கும் ஊக்கத்தையும் இனிது விளக்குகிறது. நிற்க, இந்த உலகம் உண்டான காலம் முதலாக நாளதுவரைக்கும் நாம் கௌரவமாகவும் பெருந்தன்மையோடும் பலர் மதிக்க வாழ்ந்து வருகிறோம். நம்மவரிற் பலரும், சிவபெருமானுக்கும் பெருமாளுக்கும் விநாயகர் கந்தக்கடவுள் பிர்மா தர்மராஜன் முதலிய பெரிய தெய்வங்கட்கும் வாகனங்களாகவும் கொடிகளாகவுமிருந்து பெருமை யடைந்து வருகிறோம். உலகத்திலுள்ள ஜனங்கட்கும் பேருபகாரஞ் செய்து வருகிறோம். இன்னும் பன்னிரண்டு ராசிகளிலிருந்து உலகத்திலிருக்கிற ஜனங்கட்கு ஜோதிட சாஸ்திர மூலமாக எவ்வளவோ சொல்லமுடியாத நன்மை செய்து வருகிறோம். இந்த நாட்டு ஜனங்கள் இரவுபகலாகத் தோத்திரம் புரிகிற கடவுளர்கள், நம்மிடங் கொண்டுள்ள கருணையினால் அவர்களுக்கும் உயரத்தில், நமக்கு இருப்பிடந்தந்து அவர்களது வாவை நம்மைப் பார்த்தறியும்படியான பெருமையையும் நமகளித்திருக்கிறார்கள். உண்மை யிப்படியிருக்க இவைகளை யெண்ணுமல் நமது கூட்டத்தாருக்கு மனிதர்கள் துன்பத்தை யுண்டுபண்ணுவதால் இந்தப் பெரிய கான்பரன்ஸ் மூலமாகப் பல தீர்மானங்களைச் செய்து ராஜாதிராஜராக விளங்கும் கடவுளுக்கும் உலகத்திலுள்ள மற்ற உத்தியோகஸ்தர்களுக்கும் அனுப்ப வேண்டும். நமது கான்பரன்ஸ் இனிதுமுடியக் கடவுள் கிருபை செய்வாராக என்று பேசிவிட்டுத் தமது ஆசனத்திலமர்ந்தார்.

திருவள்ளுவநாயனார் திருமூல தேவர் ஸ்ரீராமலிங்க சுவாமிகள் தாயுமானார் புத்தர்பிரான் காந்தியடிகள் சிபிச்சக்கிரவர்த்தி மநுநீதி கண்ட சோழமன்னன் கொடிபடாத்தேரீந்த பாரிவள்ளல் முதலிய பல ஜீவகாருண்ய சீலர்கள் "நாங்கள் வர முடியவில்லை; கான்பரன்ஸ் இனிது நடைபெறட்டும்" என்று அனுப்பியிருந்த தந்திகள் படிக்கப்பெற்றன.

அதன் பிறகு சுப்பிரமணியக் கடவுளது கொடியாகவிருந்து வெற்றியையே கொடுத்து வருகிற ஸ்ரீலஸ்ரீ கோழியப்ப நாயனரெழுந்து,

"நாங்கள் செய்யும் உதவியை யேற்றுக்கொண்டும், வாயில்லாத ஏழைகளாகிய எங்களிடத்தில் இரக்கங்காட்டியும், நாங்கள் கடவுளுக்கு வாகனங்களாகவும் கொடிகளாகவுமிருந்து வருவதை யுத்தேசித்தும், எங்கள் உயிருக்கு எப்படியும் துன்பம் வராமல் காப்பாற்றும்படி மனிதர்களாகிய உங்களை வணக்கமாக வேண்டிக் கொள்கிறோம்" என்ற தீர்மானத்தைப் பிரேரேபணை செய்து கம்பீரமான குரலில் பின்வருமாறு பேசினார்:—அன்பர்களே! இந்த உலகமும் இந்த உலகத்திலே வாழ்ந்து வருகிற மனிதர்களும் நாமும் மற்றையோரும் கடவுளருளாலேதான் பிறந்து வளர்ந்து வருகிறோம். ஆனால் நம் முன்னோர்கள் செய்த தவத்தால் நமது சகோதரர்களுள் ரிஷப தேவர் முதலியோரை சிவபெருமானும், கருடாழ்வார் முதலியோரை விஷ்ணு மூர்த்தியும் மூஷிகப் பிரபுவை மூத்தபிள்ளையாரும், எருமையண்ணலை தர்மராஜாவும் நமது அக்கிராசனர் வம்ஸத்தாரையும் எனது

முனிவர்களுக்கும் பக்தர்களுக்கும் கிடைக்காத பெரும்பதவியில் வை
கள். நம்முடைய ஜாதி கேவலமானதல்ல. பரம்பரையாகவே பெருமை
றது. உலகத்து ஜனங்கள் நமது பன்றி வமிசத்தாரைப் புத்தியில் அவ
சிறந்தவர்களல்லவென்று சாதாரணமாக உண்மை யறியாமல் கருதுகிறார்
மகாவிஷ்ணுவானவர், அப்படியல்ல அவர்களே சிறந்தவர்களென்று உலகத்த
அறிவதற்காகப் பன்றி யுருவமெடுத்து வேதத்தைக் காப்பாற்றினர். பரமசிவன்
பன்றிக்குட்டிகளுக்குத் தாமே அவ்வுருவங்கொண்டு பால் கொடுத்துக் காப்பாற்
றினர். நமது குலத்தில் நாரைச்சிவமும் கரிக்குருவிப் பெருமானும் மோக்ஷவின்
பம் பெற்றார்கள். கஜேந்திர ஆழ்வார் முதலியோரும் அப்படியே! இப்படிப்பட்ட
சரித்திரங்கள் சொல்ல வேண்டுமானால் கோடானு கோடியுண்டு! எந்தப் புண்ணிய
ஸ்தலங்களிலும் எந்த பக்திமார்க்கத்திலும் மோக்ஷ வழிகளிலும் நாம் பெருமை
பெற்றுக் கடவுளுக்கு வேண்டியவர்களாகவே யிருக்கிறோம். நாமில்லாவிட்டால்
சோதிட சாஸ்திரம் லக்ஷமின்றி இறந்து பட்டுப்போகும். மேலும் நாம் கெட்டவர்க
ளல்ல. நாம் வேறொருவருடைய சொத்துக்கு ஆசைப்படுவது கிடையாது.
நமக்கு ஐயறிவுதான் உண்டு என்று தெரியாதவர்கள் சொன்னாலும் நாம் புலாலுண்
பது கிடையாது. கள்ளுண்பதில்லை. பொய் பேசுவதில்லை. சூதாடுவதில்லை.
யாராவது பக்திமான்கள் துன்பப்பட்டவர்கள் நமது தேவர்களைக் கூப்பிட்டால்
வயிற்று வலியானாலும் காய்ச்சலானாலும் உடம்புக்கு முடியவில்லையென்று சொல்வ
தில்லை. பக்தர்கட்கு அருள் சுரக்க வேண்டுமென்று எப்போது சிவபெருமான்
விரும்புகிறாரோ அப்போதே நமது ரிஷபதேவர் தயாரென்கிறார். மனிதர்கள்
தமது வாகனங்களிலேற வேண்டுமென்றாலெப்படி யிருக்கிறது? குதிரை யிடக்
குப்பண்ணினால் பயணம் நின்றுபோய்விடாதா? நாம் அப்படிச் செய்வதில்லை.
நம்முடைய சரித்திரத்தைப் பார்க்கட்டும்! யாருக்காவது கஷ்டத்தை யுண்டாக்கி
யிருக்கிறோமா? இல்லவேயில்லை. மேலும் இந்த உலகத்து மனிதர்களுக்கு
நம்மைக் காப்பாற்றுவதற்காகப் பல வழிகளில் உதவி புரிகிறோம். பாலும்
மோரும் நெய்யும் அவர்களுணவிற்குக் கொடுக்கிறோம். போர்வைகட்குக் கம்பளி
யுரோமம் கொடுக்கிறோம். வயலுக்கு உரம்போடுவதற்கு எரு சப்ளை செய்கிறோம்.
புத்தகங்கட்கு அட்டைபோட நமது தோல்களையும் கொடுக்கிறோம். இப்போது
சீனி செய்வதற்கு தீதி முனிவரைப்போலவே நமது எலும்புகளையும் கொடுத்து
வருகிறோம். அவர்களுக்கு வாகனமாகவுமிருந்து வருகிறோம். அவர்கள் உண்மை
யாக பக்தி செலுத்தினால் அவர்களுடைய கடவுளரை நாம் தூக்கிக்கொண்டு வந்து
அவர்களுக்கு முன்னே விடுகிறோம். அவர்கள் கண்குளிரக்கண்டு களிக்கிறவரை
நாமும் பொறுத்துக் கொண்டிருக்கிறோம். அவர்கள் தாயில்லாப்பிள்ளையாயிருந்
தால் நமது பாலைக்கொடுத்து வளர்க்கிறோம். இப்படி மனிதருக்குப் பிறந்தது
முதல் மோக்ஷத்திற்குப் போகிறவரை உதவிபுரிந்து வருகிற நம்மை அவர்களும்
பிள்ளைபோல் வளர்த்துக், காப்பாற்றாமல் வெட்டிக்கொல்வதென்றால் பொறுக்க
முடியாத வருத்தமாயிராதா? நான் சுப்பிரமணியக் கடவுளை விட்டுப்பிரிந்ததே
கிடையாது. அங்கே பல பகுதியைப்பற்றி உளவாளிகள் பலர் வந்து சுவாமி

யிடத்தில் பின்வருமாறு சொன்னார்கள். "மகாபக்தர்கள்; இரவுபகலாகக் கோவிலே குடியாக இருக்கிறார்கள்; தொண்டு புரிகிறார்கள்; பெரும்படிப்பாளிகள்; பிரசங் களஞ் செய்கிறார்கள்; வருஷ மொருமுறை கங்கையில் தீர்த்தமாடுகிறார்கள்; கோடி கோடியான பொருளை வாரிவாரித் தருமஞ் செய்கிறார்கள். நாளையோடு அவர் களுக்குப் பூமிவாழ்க்கை முடிகிறது" என்றார்கள். அப்படியே மறுநாள் அவர் கள் புறப்பட்டு எங்கள் ஷண்முகபுரத்திற்கு வந்தார்கள். நமது நாயகர் சுப்பிர மணியக் கடவுள் "அப்பா! இவர்கள் பக்தர்கள் தான் சந்தேகமில்லை; ஆனால் என்னுடைய அடியார்களாகிய ஆடப்பர் கோழியப்பரின் வமிசத்தை முட்டை வரை கருவறுத்திருக்கிறார்கள். ஆதலால் எனக்குமட்டும் செய்த பக்தியைப் பொருட்படுத்த முடியாது; நான் அடியார்க்கடியனுதலால் எனது அடியார்க ளுடைய மனதைப் புண்படுத்துபவர்களை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன்; ஆனால் அவர்கள் உண்மையான பக்தி செய்திருப்பதால் அவர்களை யமலோகமாகிய நரக லோகத்துக்கனுப்பாமல் திரும்பவும் மறுபிறப்புக் கொடுத்துப் பூலோகத்துக் கனுப்பிவிடுங்கள்" என்று திருவாய்மலர்ந்து அனுப்பிவிட்டார்கள். நமக்கு அங்கே செல்வாக்கில்லாமற் போகவில்லை. அதை இங்குள்ள நமது மனித சகோதரர் களில் சிலர்மட்டும் தெரிந்து கொள்ளவில்லை. நம்முடைய நன்மையையும் அவர்க ளுடைய நன்மையையும் கருதியே இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக் கிறேன். முழுமனதோடு ஆதரிக்க வேண்டுகிறேன் என்று பேசினார். தீர் மானம் ஏகமனத்தோடு அங்கீகரிக்கப்பெற்றது

"மற்றவர்களைப்போலவே உங்கள்! திருவருளால் பிறந்திருக்கிற எங்களை மனிதர்கள் பல வகையாக அவமானப்படுத்தாமலும் ரகசியமாகவும் பகிரங்கமாகவும் கொலை புரியாமலுமிருக்கும்படி திருவுளம்பற்ற வேண்டுமென்று இந்தக்கூட்டம் மன்றாடுகிறது" என்ற தீர்மானத்தைப் பரமசிவனது திருக்காதிருந்து திவ்ய வாழ்க்கை வாழும் செல்வச் சிறுமான்கன்று துள்ளிக்குதித்து வந்து மேடையிலே றிப் பிரசேபணை செய்து பின்வருமாறு பேசிற்று:—

எனது தோழர்களே! உலகத்தில் எல்லா ஜீவராசிகளும் கடவுளது திருவரு ளாலேயே பிறந்திருக்கின்றன. கடவுளுக்குப் பல வகையிலும் நாம் வேண்டிய வர்களாக விருக்கிறோம். பரம்பரைச் சைவ சந்ததியிலே பிறந்திருக்கிற நாம் கெட்ட காரியம் ஒன்றும் செய்வதில்லை. எல்லாருக்கும் உபகாரமே செய்து வரு கிறோம். அப்படியிருக்க நம்மை மனிதர்கள் துடிக்கத்துடிக்கக் கத்திகொண்டு கழுத்தை யறுக்கிறார்கள்! திருவிழா வந்தாலும் பிள்ளை பிறந்தாலும் பிள்ளை பிறக்காவிட்டாலும் பொங்கல் வந்தாலும் புதுமை வந்தாலும் இழவு வந்தாலும் கலியாணம் வந்தாலும் படைப்பு வந்தாலும் பதறி விழுந்தாலும் நமது கழுத்துக்குக் கத்தி வருகிறது. நம்மவரெல்லாரிலும் சாதுக்களா யிருப்பவர்கள் ஆடி கோழி வமிசத்தாரேயாவர். அவர்களைத்தான் கண்டபடி மனிதர்கள் கழுத்தறுப்பு செய் கிறார்கள். கலிகால வரதராயும் தெய்வங்களுள் சிறந்தவராகவும் அக்கிரமம் செய் பவரை அதம் செய்பவராயும் ஏழைகளைத் தோழ்மை கொண்டவராயுமுள்ள சுப்பிர மணியக் கடவுளே அவர்களைக் காப்பதாக அடைக்கலங் கொண்டிருக்கிறார். அப்படியிருந்தும் சிவபக்தர்கள் விஷ்ணு பக்தர்கள் ஸ்கந்தபக்தர்கள் விநாயக பக்

கொண்டு ஆடு கோழி பாரணை செய்யும் மனிதர்களையும் நாம் பார்
சாகுர அஷ்டாகுர ஜபஞ்செய்யும் பக்தர்கள் பலர் புலால்கொணடு
நிரப்புகிறார்கள். சாப்பிடுவதொருபுறங் கிடக்கட்டும். கண்டபடி கழுத்தறுப்
இப்போதே தடுக்க வேண்டுமென்பதுதான் இந்தத் தீர்மானத்தின் கரு
பெரிய பெரிய கடவுளர்களால் மதிக்கப்பெற்றிருக்கிறோம். அப்படியிருக்க நம
சந்ததியாரைச் சில ஜனங்கள் கேள்வி முறையின்றித் தாயலறப்பிள்ளையையும்
கொல்லுகிறார்கள். கொலைக்குற்றம் செய்தவரைக்கூட இப்படி ஏகாலத்தில்
முச்சந்திகளில் மடக்கிக்கொண்டு ரத்தம் சொரிய அறுப்பது எந்த உலகத்திலும்
கிடையாது. அப்படி யென்ன குற்றத்தை நம்மவர்கள் மனிதர்களுக்குச் செய்
திருகிறார்கள். இதைப்பார்த்துக் கொண்டு நாம் சிலர் மட்டும் பெரிய உத்தியோ
கங்களிலிருந்து பயனென்ன? இதற்கு விமோசனமில்லாவிட்டால் நாமிருந்தா
லென்ன செத்தாலென்ன? தன் ஜாதியார் அவமானமடையத் தான் நன்கு வாழ்
பவன் ஒரு பிறப்பிற் சேர்ந்தவனேயல்லன். திக்கற்றவருக்குத் தெய்வமேதுணை
யென்றபடி வாயில்லாப் பிராணிகளுக்குக் கடவுள்தான் துணையாதலால் இந்தத்
தீர்மானத்தை அங்கீகரித்து நமது தேவர்கட்கு அனுப்ப வேண்டுகிறேன் என்று
சபையார் கண்களில் கண்ணீர் சொட்டும்படி உருக்கமாகப் பேசினர். ஏக ஆர
வாரத்தோடு தீர்மானம் அங்கீகரிக்கப்பெற்றது.

அக்கிரமம் செய்வாரைத் தண்டித்து நல்வழிப்படுத்துகிற யமதர்மராஜனது
வாகனமாயிருக்கிற மகிஷப்பெருமானெழுந்து, "உண்மையில் காளிகறுப்பழகிய
நீங்கள் விரும்பாதிருக்கும்போது உங்கள் பெயரைச் சொல்லி எங்கள் கழுத்தை
யறுப்பவர்களை நல்வழிப்படுத்த நீங்கள் முன் வந்து முயற்சி செய்யவேண்டு
மென்று வணக்கமாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்" என்ற தீர்மானத்தைப் பிரே
ரணை செய்து பின் வருமாறு பேசியது :—

எனது அன்பின் மிக்க சகோதரர்களே!

காளியம்மனையும் கறுப்பண்ணசாமியையும் திருப்திப்படுத்தவேண்டுமென்று
கருதிய சில மனிதர்கள் நம்மவரின கழுத்தை யறுத்து வருகிறார்கள். உண்மை
யில் காளியம்மன் பராசக்தியின் அம்சமாதலாலும் கருப்பண்ணசுவாமி மகாவிஷ்ணு
வின் அம்சமாதலாலும இருவரும் ஆடு கோழிகளைக்கொன்று ஒருநாளும் மகிழ்வார்
களென்று கருத இடமேயில்லை. ஆனால் இவர்கள் குளிக்கப் போய்ச் சேறு பூசிக்
கொள்வதைப் போலததான் கடாய்ப்பலி கொடுத்துப் பாபத்தைக் கட்டிக்
கொள்வதோடு தேவாகளின் கோபத்திற்கும் ஆளாகிறார்கள். ஆனபடியினாலே
இந்தத தீர்மானத்தைக காளி கறுப்பண்ணன் முனியய்யா முதலியோருக்கு
அனுப்பி, அவாகளை வழிபடும் மனிதர்கள் இனிமேல் எந்தவிதமாகவும் யாருடைய
பெயரைச் சொல்லியும் நம்மினததவரைக் கண்டிப்பாக வெட்டக்கூடாதென்று
உலகத்திலுள்ள மனிதாகட்கு உத்தாவிடுமாறு வேண்டிக்கொள்ளவேண்டும் என்று
பேசியது. இதனைப்பலரும் ஆமோதிக்கவே தீர்மானம் ஏகமனதாக ஒப்புக்
கொள்ளப்பட்டது.

உலகம் உய்வதற்குக் காரணமான பசுக்களின் தலைவரான ஸ்ரீமதி காமதேனு ராச்சியார் கம்பீரமான நடைநடந்து பலத்த ஆரவாரத்தினிடையில் மேடையிலேறி "முன்னுள்ள பெரியார்களும் தேவர்களும் எம்பெருமானும் எழுதுகளாகிய எங்களிடத்துக் கிருபைகூர்ந்தெழுதி வைத்திருக்கிற நூல்களை யெடுத்து, வருஷத்தில் மூன்று மாதங்களுக்காவது மனிதர்களுக்கு நீங்கள் உபதேசித்து எங்கள் உயிரைக் காப்பாற்றி வர வேண்டுமென்று இந்தக் கூட்டம் மன்றாடுகிறது" என்ற தீர்மானத்தைப் பிரேரேபணை செய்து பேசியது பின்வருமாறு :—

